| English | Tamil |
|---|---|
| **WorkSafe Cleaning Checklist** | ***WorkSafe* சுத்தப்படுத்தல் தொடர்பிலான பட்டியல்** |
| 1. Routine Cleaning | *1. வழக்கமான சுத்தப்படுத்தல் செயன்முறை* |
| **What do I need?** | **எனக்கு என்ன தேவை?** |
| ▪ Detergent, either as a solution that can be mixed with water, or as wipes; or<br>▪ A 2-in-1 detergent and disinfectant solution, or wipes which can be used for routine cleaning. | ▪ *துப்புரவு செய்யும் பொருள்(detergent), தண்ணீரில் கலக்கக்கூடிய ஒரு கரைசலாக அல்லது wipes-ஆக: அல்லது*<br>▪ *2-in-1 detergent மற்றும் கிருமிநாசினி கரைசல், அல்லது வழக்கமான சுத்தப்படுத்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய wipes.* |
| **When should I clean?** | **நான் எப்போது சுத்தம் செய்ய வேண்டும்?** |
| ▪ Clean your workplace at the end of the workday using a detergent, or a 2-in-1 detergent and disinfectant solution;<br><br>▪ Focus on: Frequently touched surfaces such as tabletops, door handles, light switches, desks, toilets and toilet doors, taps, TV remotes, kitchen surfaces and cupboard handles;<br><br>▪ Clean objects and surfaces used repeatedly by lots of people frequently throughout the day using a detergent, or 2-in-1 detergent and disinfectant solution. For example: Trolleys and baskets, checkouts, EFTPOS machines, handrails, elevator buttons<br><br>▪ Clean surfaces and fittings that are visibly soiled or after any spillage as soon as possible using a detergent, or a 2-in-1 detergent and disinfectant solution;<br><br>▪ Instruct workers to clean personal property that has been | ▪ *வேலைநாளின் முடிவில் ஒரு detergent அல்லது 2-in-1 detergent மற்றும் கிருமிநாசினி கரைசலைப் பயன்படுத்தி  உங்கள் பணியிடத்தை சுத்தம் செய்யுங்கள்;*<br><br>▪ *கவனம் செலுத்துங்கள்: அதிகளவு தொடுகைக்குள்ளாகும் இடங்களான மேசை மேற்பரப்புகள், கதவு கைப்பிடிகள், light switches, மேசைகள், கழிவறைகள் மற்றும் கழிவறைக் கைபிடிகள், taps, TV remotes, சமையலறை மேற்பரப்புகள் மற்றும் cupboard கைப்பிடிகள்;*<br><br>▪ *ஏராளமானோரால் அடிக்கடி பயன்படுத்தப்படும் பொருட்களை அல்லது மேற்பரப்புக்களை detergent அல்லது 2-in-1 detergent மற்றும் கிருமிநாசினி கரைசலைப் பயன்படுத்தி நாள் முழுவதும் சுத்தம் செய்யுங்கள்: உதாரணமாக: தள்ளுவண்டிகள் மற்றும் கூடைகள், checkouts, EFTPOS இயந்திரங்கள், handrails, லிஃப்ட் பொத்தான்கள்*<br><br>▪ *அழுக்கடைந்திருப்பது வெளிப்படையாகத் தெரியும் மேற்பரப்புக்களையும் இடங்களையும் அல்லது ஏதாவது சிந்தியிருந்தால் அந்த இடத்தையும், detergent அல்லது 2-in-1 detergent மற்றும் கிருமிநாசினி கரைசலைப் பயன்படுத்தி சுத்தம் செய்யுங்கள்;* |

| | |
|---|---|
| brought to work and is likely to be handled at work or during breaks with a detergent or 2-in-1 detergent and disinfectant solution, or wipes. For example: Sunglasses, mobile phones, ipads, car keys | ▪ பணியாளர்கள் வேலைக்கு வரும்போது தம்முடன் கொண்டுவந்து, வேலைநேரத்தின்போதோ அல்லது இடைவேளையின்போதோ பயன்படுத்திய பொருட்களை detergent அல்லது 2-in-1 detergent மற்றும் கிருமிநாசினி கரைசல் அல்லது wipes பயன்படுத்தி சுத்தம் செய்யுமாறு அவர்களிடம் அறிவுறுத்துங்கள். உதாரணமாக: Sunglasses, மொபைல் போன்கள், ipads, கார் சாவிகள் |
| 1. How to Safely Clean | ***1. பாதுகாப்பாக சுத்தம் செய்வது எப்படி*** |
| ▪ Read the product label and Safety Data Sheet for the cleaning product(s) before using and make sure you follow all instructions, including all required personal protective equipment. Also make sure the product is suitable for use on the surface you are cleaning;<br><br>▪ Instruct workers to wear gloves when cleaning and make sure they know to wash their hands very well with soap and water, or to use alcohol-based hand sanitiser if they cannot wash their hands, both before and after wearing gloves;<br><br>▪ If possible, use disposable gloves when cleaning and discard after each use. Otherwise, only use reusable gloves for routine cleaning and do not share gloves between workers; | ▪ துப்புரவு செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு அதன் லேபிள் மற்றும் Safety Data Sheet-ஐ படித்து, தேவையான அனைத்து தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட அனைத்து வழிமுறைகளையும் நீங்கள் பின்பற்றுவதை உறுதிசெய்க. மேலும் அந்தப்பொருள் நீங்கள் சுத்தம் செய்யும் மேற்பரப்பில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமானது என்பதை உறுதிப்படுத்துக;<br><br>▪ துப்புரவு செய்யும் போது கையுறைகளை அணியுமாறு தொழிலாளர்களுக்கு அறிவுறுத்துங்கள். கையுறைகளை அணிவதற்கு முன்பும் பின்பும் சோப்பு மற்றும் தண்ணீரில் கைகளை நன்றாகக் கழுவத் தெரிந்திருக்கிறது என்பதையும், கைகளை கழுவ முடியாவிட்டால் ஆல்கஹால் சார்ந்த hand sanitiser பயன்படுத்தத் தெரியும் என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்;<br><br>▪ சுத்தம் செய்யும் போது, முடியுமானால், ஒருதடவை மாத்திரம் பயன்படுத்தும்(disposable) கையுறைகளை பயன்படுத்துங்கள். ஒவ்வொரு பயன்பாட்டிற்குப் பிறகும் அவற்றை வீசுங்கள். இல்லையெனில் வழக்கமான சுத்தப்படுத்தல் செயன்முறைக்கென மீண்டும் பயன்படுத்தக்கூடிய(reusable) கையுறைகளை மட்டுமே பயன்படுத்துவதுடன் தொழிலாளர்கள் அவற்றைத் தமக்கிடையே பகிர்ந்துகொள்ளக்கூடாது. |

| | |
|---|---|
| **After cleaning** | **சுத்தம் செய்த பின்னர்** |
| ▪ Dispose of any disposable cloths in a rubbish bag, or launder reusable cloths in the usual way. | ▪ பயன்படுத்திவிட்டு வீசியெறியும் துணிகளை ஒரு குப்பைப் பையில் போட்டு அப்புறப்படுத்துங்கள், மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணிகளை வழக்கமான முறையில் சலவை செய்யுங்கள். |
| 2. Cleaning if someone in my workplace is suspected or confirmed to have COVID-19 | 2. எனது பணியிடத்தில் யாருக்கேனும் COVID-19 தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டால் அல்லது COVID-19 தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டால் மேற்கொள்ளப்படவேண்டிய சுத்திகரிப்பு |
| **Preparing to clean** | **சுத்தம் செய்யத் தயாராதல்** |
| ▪ Prevent access to the areas that were used by the suspected or confirmed case as well as any common areas (break rooms, bathrooms) and any known or likely touch points;<br>▪ Open outside doors and windows if possible to increase air circulation. | ▪ தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுபவர் அல்லது தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டவரால் பயன்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் பொதுவான பகுதிகள் (இடைவேளை எடுத்துக்கொள்வதற்கான அறைகள், குளியலறைகள்) மற்றும் குறித்த நபரின் தொடுகைக்கு உட்பட்டிருக்கக்கூடிய பகுதிகளை மற்றவர்கள் பயன்படுத்தமுடியாதவாறு தடைசெய்யவும்;<br>▪ முடியுமானால் வெளிப்புற கதவு மற்றும் ஜன்னல்களைத் திறந்து காற்றோட்டத்தை அதிகரிக்கவும் |
| **What do I need?** | **எனக்கு என்ன தேவை?** |
| ▪ A detergent, as a solution that can be mixed with water; and<br><br>▪ A disinfectant containing ≥ 70% alcohol, quaternary ammonium compounds, chlorine bleach or oxygen bleach (see the Department of Health website for more information on the correct bleach solution); or<br><br>▪ A combined detergent and disinfectant solution;<br><br>▪ Appropriate personal protective equipment for cleaning | ▪ ஒரு சுத்தப்படுத்தும் பொருள்(detergent)-தண்ணீரில் கலக்கக்கூடிய ஒரு கரைசலாக- மற்றும்<br><br>▪ ≥70% ஆல்கஹால், quaternary ammonium compounds, chlorine bleach அல்லது oxygen bleach ஆகியவற்றைக் கொண்ட ஒரு கிருமிநாசினி (சரியான bleach கரைசல் குறித்த கூடுதல் தகவலுக்கு சுகாதாரத் துறை வலைத்தளத்தைப் பார்க்கவும்); அல்லது<br><br>▪ Combined detergent மற்றும் கிருமிநாசினி கரைசல்; |

| | |
|---|---|
| staff, including disposable gloves and safety eyewear;<br><br>▪ Provide a disposable apron where there is visible contamination with bodily fluids;<br><br>▪ A surgical mask if the person suspected to have COVID-19 is in the room. | ▪ *பயன்படுத்திவிட்டு வீசியெறியும் கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடிகள் உள்ளிட்ட, துப்புரவு ஊழியர்களுக்கு பொருத்தமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்;*<br><br>▪ *உடலிலிருந்து வெளிப்பட்ட ஏதேனும் திரவத்தன்மையான பொருட்கள் இருந்தால், பயன்படுத்திவிட்டு வீசியெறியக்கூடிய apron ஒன்றை வழங்குதல்;*<br><br>▪ *COVID-19 இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர் அறையில் இருந்தால், ஒரு முகக்கவசம்.* |
| **What should I clean?** | ***நான் எதை சுத்தம் செய்ய வேண்டும்?*** |
| Thoroughly clean and then disinfect:<br>▪ all areas of suspected or confirmed contamination;<br>▪ any common areas (e.g. break rooms, washrooms), and<br>▪ any known or likely touch points in the workplace. | *நன்கு சுத்தப்படுத்திய பின்னர் கிருமி நீக்கம் செய்யவும்:*<br>▪ *தூய்மைக்கேடு ஏற்பட்ட அல்லது சந்தேகத்திற்கிடமான அனைத்து பகுதிகளும்;*<br>▪ *எந்தவொரு பொதுவான பகுதியும்(உதாரணமாக இடைவேளை எடுத்துக்கொள்வதற்கான அறைகள், கழிவறைகள்), மற்றும்*<br>▪ *வேலைத்தளத்தில், உறுதிசெய்யப்பட்ட அல்லது தொடுகைக்கு உட்பட்டிருக்கலாம் என சந்தேதிக்கப்படும் பகுதிகள்.* |

| **How to safely clean** | **பாதுகாப்பாக சுத்தம் செய்வது எப்படி** |
|---|---|
| ▪ Read the product label and Safety Data Sheet for the cleaning product(s) before using and make sure you follow all instructions, including all required personal protective equipment. Also make sure the product is suitable for use on the surface you are cleaning;<br><br>▪ Make sure staff are trained in putting on and taking off personal protective equipment, including washing or sanitising hands between steps;<br><br>▪ Use disposable gloves where possible, and discard after each use. Wash or sanitise hands before and after wearing gloves. | ▪ *துப்புரவு செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு அதன் லேபிள் மற்றும் Safety Data Sheet-ஐ படித்து, தேவையான அனைத்து தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட அனைத்து வழிமுறைகளையும் நீங்கள் பின்பற்றுவதை உறுதிசெய்க. மேலும் அந்தப்பொருள் நீங்கள் சுத்தம் செய்யும் மேற்பரப்பில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமானது என்பதை உறுதிப்படுத்துக;*<br><br>▪ *உங்கள் ஊழியர்களுக்கு அனைத்து தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை அணிந்துகொள்வதற்கும் அவற்றைக் கழற்றுவதற்கும் தெரியும் என்பதை உறுதிப்படுத்துங்கள். இப்படிமுறைகளைக் கையாளுவதற்கு முன்பும் பின்பும் கைகளை கழுவுவது அல்லது sanitise செய்துகொள்வது உட்பட;*<br><br>▪ *சுத்தம் செய்யும் போது, முடியுமானால், ஒருதடவை மாத்திரம் பயன்படுத்தும்(disposable) கையுறைகளை பயன்படுத்துங்கள். ஒவ்வொரு பயன்பாட்டிற்குப் பிறகும் அவற்றை வீசுங்கள் . கையுறைகளை அணிவதற்கு முன்பும் பின்பும் கைகளை கழுவுங்கள் அல்லது sanitise செய்துகொள்ளுங்கள்.* |
| **After cleaning** | **சுத்தம் செய்த பின்னர்** |
| ▪ Dispose of any single-use personal protective equipment, disposable cloths and covers in a rubbish bag and place it inside another rubbish bag and dispose of in general waste;<br>▪ Launder any reusable cleaning equipment including mop heads and disposable cloths and completely dry before re-use. | ▪ *ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், துணி மற்றும் கவர்கள் ஆகியவற்றை, ஒரு குப்பைப் பையில் போட்டு அதனை மற்றொரு குப்பைப் பையில் போட்டு general waste-க்குள் போடவும்;*<br>▪ *மீண்டும் பயன்படுத்தக்கூடிய mop heads போன்ற உபகரணங்கள் மற்றும் துணிகள் உள்ளிட்டவற்றைத் துவைத்து, மீண்டும் பயன்படுத்தமுன்னர் நன்கு உலரவைக்கவும்.* |

| **Stay informed** | ***தகவலறிந்திருங்கள்*** |
|---|---|
| For more information about keeping your work place COVID-19 safe visit www.safeworkaustralia.gov.au/covid-19-information-workplaces. | *COVID-19 இலிருந்து உங்கள் பணியிடத்தைப் பாதுகாத்துக் கொள்வது குறித்த மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள: www.safeworkaustralia.gov.au/covid-19-information-workplaces* |
| Keep up to date with www.covid19.act.gov.au advice on controls to prevent the spread of COVID-19, including any restrictions on normal business activities, and respond accordingly. | *COVID-19 பரவலைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும், வணிக நடவடிக்கைகளில் ஏதேனும் கட்டுப்பாடுகள் உள்ளனவா என்பது பற்றியும் அறிந்துகொள்ள www.covid19.act.gov.au- ஐ தொடர்ந்தும் பார்வையிடுங்கள். அதற்கேற்ப நடந்துகொள்ளுங்கள்.* |
| Have a Question? Looking for advice? Call the COVID-19 helpline on (02) 6207 7244 (8am to 8pm daily). | *ஏதேனும் கேள்வி இருக்கிறதா? ஆலோசனை பெறவிரும்புகிறீர்களா? COVID-19 helpline-ஐ (02) 6207 7244 (தினமும் 8am-8pm வரை) என்ற இலக்கத்தில் அழைக்கவும்.* |
| Subscribe to the Our Canberra email newsletter to get the latest COVID-19 updates via email. Subscribe here: https://www.act.gov.au/our-canberra/subscribe-to-our-canberra | *COVID-19 பற்றிய புதுப்பிக்கப்பட்ட மற்றும் பிந்திய செய்திகளை மின்னஞ்சல் வழியாகப் பெற Our Canberra என்ற எமது மின்னஞ்சல் செய்திச்சேவையை Subscribe செய்யுங்கள்: https://www.act.gov.au/our-canberra/subscribe-to-our-canberra* |